

பயிற்சி : அழகுக்கலை பயிற்சி

கதை சொல்பவர் : சிங்கராசா சிந்துஜா

பயிற்சி நெறிக்காலம் : 2009.04.01 – 2009.09.30

கதை சேகரிப்பவர் : சோ.புண்ணியமூர்த்தி ( திட்ட உத்தியோகத்தர்)

கதை விபரணம் :

கல்முனை குருந்தையடி கிராமத்தை சேர்ந்த 21 வயதையுடைய நான் 1990ஆண்டு 8ம்மாதம் 25ம் திகதி பிறந்தேன்.எனது குடும்பம் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டது. அதில் நான் மூத்த பிள்ளை எனக்கு கீழ் A/L படிக்கும் ஒரு தங்கையும், 7ம் வகுப்பு படிக்கும் ஒரு தம்பியும் உள்ளனர்.

எனது தாயார் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது இறந்து விட்டார். அவ்வேளை எனக்கு 14வயது எங்களை இன் நிலையில் எங்களது அம்மாவின் அக்கா (பெரியம்மா) தான் பராமரித்து வந்தார்.

இவ்வேளை எனது அப்பா வீதியோரத்தில் வடை விற்கும் ஒரு வியாபாரி ஆவார் இவரின் வருமானம் எங்கள் குடும்பத்திற்கு போதாத நிலை காணப்பட்டது. நானும் எனது அப்பாவின் உழைப்பில் G.C.E O/L வரை மட்டும் படித்தேன் வறுமையின் காரணத்தினாலும் நான் ஒரு இருதய பலம் குறைந்தவராக இருந்ததாலும் O/L பெறுபேறுகள் போதாமையினாலும் எனது கல்வியை முற்றாக நிறுத்திக் கொண்டேன்.

இவ்வாறு நாங்கள் கஸ்ரப்பட்டு கொண்டிருந்த வேளையில் SWOAD அமைப்பில் பணிபுரியும் அலுவலக ஊழியர் கதிர்மலர் மூலம் SWOAD நிறுவனம் ODW எனும் நிதி நிறுவனத்தின் உதவியுடன் அழகுக்கலை எனும் பயிற்சி நெறியை நடாத்தப் போவதாக கூறினார் அதன் பிற்பாடு ஆர்வத்துடன் SWOAD கல்முனைப் பிரதேச அலுவலகத்திற்கு விரைந்து அங்கு இப் பயிற்சி நெறி சம்மந்தமான தகவல்களைப் பெற்றுக்கொண்டேன்.

இறைவன் என்னை இந்நிலையில் கைவிடவில்லையென எண்ணினேன் ஏனெனில் 25 பேர் கொண்ட இப் பயிற்சி நெறிக்கு 40க்கு மேற்பட்ட யுவதிகள் விண்ணப்பித்திருந்தமையை அறிந்தேன். இருந்தாலும் இப் பயிற்சிக்கான நேர்முக பரீட்சையில் நான் தெரிவாவேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அம்மா இறந்தமை,சுனாமி பாதிப்பு,அப்பா வடை விற்றல் போன்ற காரணங்களினால் நான் நினைத்தவாறே இந்த நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டேன்.

குடும்ப நிலை,தொழில் இன்மை,அப்பாவின் வருமானம் போதாது கல்வி கற்கும் 2 சகோதாரர்கள் இவைகளை கருத்திற். கொண்டு அப் பயிற்சி நெறியை தவற விடாமல் சிறப்பாக கற்றுக் கொள்வதற்கு தூண்டு கோலாக அமைந்தன. SWOAD அமைப்பினால் மேற் கொள்ளப்பட்ட இப் பயிற்சி நெறியானது தொழில் திறன் பயிற்சி மட்டுமன்றி Career Guidance, First Aid, Life Skill போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டது. இப் பயிற்சியின் ஊடாக எனது ஆளுமை மற்றும் சுயமாக ஒரு தொழிலை மேற்கொள்வதற்கான தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது.

இப் பயிற்சி நெறியானது 6மாத காலம் கொண்டது இப் பயிற்சி நெறியின் போது மாதாந்த கொடுப்பனவாக 2000ரூபா பணம் கிடைத்தது. அத்துடன் எங்களுக்கு SWOAD அமைப்பினால் பரீட்சை நாடாத்தப்பட்டு 15000ரூபா பெறுமதியான தொழிலுக்கான உபகரணங்களும்,சான்றிதலழ்களும் கிடைக்கப்பெற்றன.

இப் பயிற்சி நெறியின் ஊடாக பெற்ற திறன்கள் உபகரணங்களைக் கொண்டு எனது வீட்டிலும்,திருமண வீடுகளிலும் சுயமாக தொழிலை மேற்கொண்டு தற்போது மாதம் ஒன்றிற்கு 3000ரூபா பெறுகின்றேன். திருமண வீடு, சிறப்பு வீடுகளுக்கு சென்று அழகுபடுத்தும் போது 5000 – 6000 ரூபா வரை ஒரு தடவையில் பெறுகின்றேன். இவ்வாறு பெறப்படும் வுருமானத்தில் எனக்கு கீழ் உள்ள பாடசாலை செல்லும் தம்பியையும் 2 தங்கைமார்களையும் படிப்பிக்கின்றேன். இவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1500ரூபா செலவாகும் மீதி 1500 ரூபாவில் எனது செலவிற்கு 1200 ரூபா எடுத்து விடுவேன் மீதிப்பணம் 300ரூபா வை மாதாந்தம் இங்கு இயங்கும் மாதர் சங்கத்தில் வைப்பில் இட்டு வருகின்றேன்.

எனது அடுத்த கட்ட நடவடிக்கையாக (முடி வெட்டுதல் ,சுறுட்டுதல்) அதாவது அழகுக்கலையில் நாங்கள் படிக்காத ஏனைய பகுதிகளை முடிப்பதாகும் இவ்வாறு மேலதிக பகுதிகளை முடித்து எதிர்காலத்தில் சொந்தமாக ஒரு கடை போட்டு வருமானம் பெற வேண்டும் என்பதே எனது ஆசையும்,விருப்பமும் ஆகும்.

இறுதியாக நான் SWOAD/ODW நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

